[12th March 1959

SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, இந்த மரக் கோணம் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டது. இதனுடைய செலவை அரசாங்கமே ஏற்றுககொண்டதா, அல்லது அங்குள்ள ஆதி திராவிட மக்களிடமிருந்துதான் வசூலிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. சாதாரணமாக ஹரிஜனங்களுக்கு எந்த முறையில் பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறதோ அந்த முறையில் இதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

A murder case

* 729 *Q.*--SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether some persons were prosecuted in Mangampalayam, Thondamuthur firka, Coimbatore taluk, on a charge of murdering one Ponnuswamy of the same village during 1956;

(*b*) whether the case against them was withdrawn by the Police during 1957 when it was pending in Sessions; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM: ஸார், இந்த பொன்னுசாமி கொலை செய்யப்பட்டதாக யார் யார் மீது எல்லாம் வழக்குத் தொடரப்பட்டிருந்தது? இந்த வழக்கினுடைய முடிவு என்ன ஆயிற்று? 1957-ல் வாபஸ் வாங்கப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது, அதற்கு பின்னுலாவது வழக்கு வாபஸ் பெறப்பட்டதா? அவ்விதம் வாபஸ் பெறப்பட்டது என்ருல் என்ன காரணத்திற்காக வாபஸ் பெறப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பொன்னுசாமி என்கின்ற பெயரில் எப்போதும் கேஸ் வாபஸ் வாங்கப்படவில்லை. 1957-ல் வேறு ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்விதம் பதிவு செய்யப்பட்ட கேஸில் உட்பட்டிருந்த தொண்டதேதூர் பிர்க்காவைச் சேர்ந்த மங்கலபாளையத்தைச் சேர்ந்த பெரியதுரை அல்லது துரைசாமி என்பவர் இறந்து போய்விட்டார் என்ற காரணத்திற்காக வாபஸ் பெறப்பட்டது. அதன் பின்னுல் இறந்து போனவர் உயிரோடு இருக்கிருர் என்ற செய்தி கிடைத்தது. இதில் சரியானபடி நடவடிக்கை "எடுக்காத காரணத்திற்காக போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீதும் போலீஸ் டிஸ்ட்ரிக்ட் குப்பரின்டென்டெண்ட் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM:—

MR. SPEAKER: After the Hon. Minister's reply, I do not know what exactly the hon. Member is going to ask.

SRI M. KALYANASUNDARAM: இறந்தவருடைய மனைவியும், மாமி யாரும் அவர் இறக்கவில்லை, உயிரோடு இருக்கிருர் என்று கூறியும் வழக்கு தொடரப்பட்டதென்பது உண்மையா?

MR. SPEAKER: That is another case. The hon. Member is asking about an entirely different case.

12th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுதான் நான் சொன்னேன். உயிரோடு இருந்தவரை இறந்ததாக கேஸ் போட்டு நடவடிக்கை எடுத்ததற்காக குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

MR. SPEAKER : I cannot allow any more supplementaries. If the hon. Members want to refer to other cases, let them put separate questions.

Crimes

* 730 Q.—SRI A. A. RASHEED (on behalf of Sri M. P. Sarathi) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த ராஜ்யத்தில் கிரிமினல் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டு வருவது உண்மையா ?

(ஆ) குற்றங்களைப் புலன் கண்டுபிடிக்கப் போதிய பயிற்சி பெற்ற நிபுணர்கள் இருக்கிறார்களா ?

(இ) குற்றங்கள் அதிகரிக்காமல் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. On the other hand during recent years crime has been progressively decreasing.

(*b*) Yes, Sir.

(*c*) Scientific methods of investigation and the study of foot-prints and finger-prints are employed. Whenever there is increase in crime and cases are frequently reported in particular areas, action in border Police stations is co-ordinated and special parties are drafted from different stations to comb the areas simultaneously. The Police Radio network and the Dog Squad are made use of, wherever possible.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, மதுவிலக்குக் குற்றங்களும் கிரிமினல் குற்றத்தில் சம்பந்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எல்லாம் குற்றங்கள்தான்.

SRI A. A. RASHEED : Is there any proposal to license private firm for detective work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal Sir.

SRI A. GOVINDASAMY : மது விலக்குக் குற்றங்கள் கிரிமினல் குற்றத்தில் வருகிற காரணத்தினால், மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் மதுவிலக்குக் குற்றவாளிகளைப் பிடிக்க போலீஸ் நாய்களை உபயோகிக்க அரசாங்கம் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் நாய்கள் சில சமயங்களில் அதற்குக் கூட உபயோகப்படுத்தப்படுகின்றன.